பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**16 10 2026 FRIDAY 6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** தீவிரவாதத்தை ஒடுக்குவதில் தேசிய பாதுகாப்புப் படையினரின் பங்களிப்பு இன்றியமையாதது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிக்கான திருத்தப்பட்ட நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

**3)** தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் அடுத்த மாதம் **12**-ஆம் தேதி தொடங்கி, டிசம்பர் மாதம் **11**-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**4)** திருநெல்வேலி, கன்னியாகுமரி, நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**5)** உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Jagsher Singh Khangurra** வெண்கலப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

தீவிரவாதத்தை ஒடுக்குவதில் தேசிய பாதுகாப்புப் படையினரின் பங்களிப்பு இன்றியமையாதது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேசிய பாதுகாப்புப் படையின் நிறுவன தினத்தையொட்டி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டை பாதுகாப்பதற்காக இப்படையினர் ஆற்றிவரும் பணி பெருமிதத்திற்குரியது என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிக்கான திருத்தப்பட்ட நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

தனியார் பள்ளி ஆசிரியர்களையும், சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தகுதி வாய்ந்த நபர்களையும் இப்பணிக்களுக்காக பயன்படுத்திக் கொள்வதற்கு இந்த திருத்தப்பட்ட நெறிமுறை வகை செய்கிறது.

<<<<<<>>>>>>

தனியார் பால் விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்காக ஒழுங்கு முறை ஆணையத்தை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று பால்வளத்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி கூறியுள்ளார்.

இன்று பெரம்பலூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை சேர்ந்த பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர் பேசினார்.

பால் உற்பத்தியில் பெரம்பலூர் மாவட்டம் இரண்டாவது இடத்தில் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பொங்கல் பண்டிகையையொட்டி, இலவச வேட்டி — சேலை வழங்குவதற்காக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கைத்தறித்துறை அமைச்சர் திரு விஜய் பாலாஜி கூறியுள்ளார்

இன்று காட்பாடியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte — விஜய் பாலாஜி - 25 Sec. )*

<<<<<<>>>>>>

ஆம்னி பேருந்துகளின் கட்டண உயர்வை தடுக்க தவெக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று திமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், விடுமுறையை முன்னிட்டு சென்னையிலிருந்து வெளியூர் செல்லும் ஆம்னி பேருந்துகளின் கட்டணம் வழக்கத்தைவிட ஆறு முதல் எட்டு மடங்கு உயர்த்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்டிகை நெருங்கும் முன்பே முன்கூட்டியே திட்டமிட்டு கூடுதல் அரசு பேருந்துகளை தவெக அரசு இயக்காதது ஏன் என்றும் திமுக அந்த அறிக்கையில் வினவியுள்ளது.

<<<<<<>>>>>>

மக்கள் நலனில் அக்கறையின்றி தவெக அரசு செயல்படுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விலைவாசி உயர்வினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

ஒரு கிலோ அரிசியின் விலை 100 ருபாயை எட்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனை கட்டுப்படுத்த தவெக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

காவிரியில் தமிழகத்திற்குரிய நீரை பெற முடியாததன் காரணமாக வேளாண் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் அனுபவம் இல்லாமல் தவெக அரசு மேற்கொண்ட முடிவுகள் மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக மாநில பிஜேபி இளைஞரணி தலைவர் திரு எஸ் ஜி சூர்யா கூறியுள்ளார்.

இன்று வேலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின் தட்டுப்பாட்டை களைய ஒரு யூனிட் மின்சாரம் 37 ரூபாய்க்கு வாங்கப்படும் அவல நிலைக்கு தவெக அரசு தள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

மாநில அரசின் மெத்தனமான செயல்பாடே இதற்கு காரணம் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்தவும் தவெக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் திரு எஸ் ஜி சூர்யா கூறினார்.

<<<<<<>>>>>>

நிர்வாக முடிவுகளை மேற்கொள்வதில் தவெக அரசு தடுமாறுவது ஏன் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வினவியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆயிரம் மினி பேருந்துகள் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் முதல்நாள் கோரப்பட்டு, மறுநாள் ரத்து செய்யப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

கொள்கை முடிவுகளை எடுப்பத்தில் உள்ள குழப்பங்களே இதற்கு காரணம் என்று அவர் கூறியுள்ளார்.

ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு நன்கு ஆராய்ந்து தெளிவான முடிவுகளை எடுப்பதும், அதில் உறுதியாக இருப்பதும் அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் தவெக அரசு உறுதியான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த தவெக அரசு உறதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் திரு டி டி வி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாகப்பட்டினத்தில் 100 கிலோ போதைப்பொருள் வைத்திருந்த தவெக நிர்வாகி கைது செய்யப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் ஆர் எஸ் எஸ் அமைப்பு அணிவகுப்பு நடத்த அனுமதி அளிக்குமாறு காவல்துறைக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதி திரு லஷ்மி நாராயணன் இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

முன்னதாக, தமிழக அரசு சார்பில் ஆர் எஸ் எஸ் அணிவகுப்பிற்கு அனுமதி வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

இதேபோல், ஏற்கனவே, உயர்நீதிமன்றம் வகுத்த விதிமுறைகள் பின்பற்றப்படும் என்று ஆர் எஸ் எஸ் தரப்பிலும் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

இதனை பதிவு செய்துகொண்ட நீதிபதி, உரிய அனுமதியை வழங்குமாறு காவல்துறைக்கு உத்தரவிட்டார்.

மாநிலம் முழுவதும் 128 இடங்களில் இந்த அணிவகுப்பை நடத்த ஆர் எஸ் எஸ் திட்டமிட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் அடுத்த மாதம் 12-ஆம் தேதி தொடங்கி, டிசம்பர் மாதம் 11-ஆம் தேதிவரை நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

வரைவு வாக்காளர் பட்டியல் அடுத்த மாதம் 12-ஆம் தேதியும், இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 4-ஆம் தேதியும் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

திருநெல்வேலி, கன்னியாகுமரி, நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 45 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கங்களில், கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு காந்திராஜ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------------

சென்னை மயிலாப்பூர் லஸ் சர்ச் சாலையில் உள்ள மேம்படுத்தப்பட்ட நாகேஸ்வரராவ் பூங்காவினை மாநில அமைச்சர் திரு வெங்கடரமணன் இன்று திறந்துவைத்தார்.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சமூக நீதித்துறை அமைச்சர் திரு வன்னி அரசு, ஐந்து கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

---------------

பெரம்பலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முதல் நிலை மீட்பாளர்களுக்கான பயிற்சி வகுப்பு ஆட்சியர் திருமதி மிருணாளினி தலைமையில் நடைபெற்றது.

------------------

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆட்சியர் திரு மதுபாலன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Jagsher Singh Khangurra** வெண்கலப்பதக்கம் வென்றார்.

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் **19** வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------------

**23** வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Amruta Pujari** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவின் **Las Vegas-**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் **72** கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், சீனாவின் **Wenjin Qiu-**வை வென்றார்.

-------------

சிட்னி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Garima Kundu** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **21-15, 21-18** என்ற செட் கணக்கில், பிலிப்பைன்சின் **De Guzman Mikaela Joy**-ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் வெற்றிபெற்று **Ginpaul Sonna**-வும் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

---------------

செக் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Priyanshu Rajawat** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Naishaa Kaur Bhatoye**-வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<END>>>>>>**